Registered as Newspaper
THE SUDAR OLI
# சுடர் ஒளி
05.04.2020 077 316 5555 ஞாயிற்றுக்கிழமை

## ஒருவருக்கு கொரோனா!

கொழும்பு, ஏப். 5
இலங்கையில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதுவரை 167பேர் கொரோனா நோயாளிகளாக இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2

## யாழில் ஊரடங்கு நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் நாளை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படாது. மறு அறிவித்தல் வரையில் தொடர்ந்து இருக்கும். ஏனைய 19 மாவட்டங்களில் நாளை காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் மீண்டும் 2 மணிக்கு நடை முறைப்படுத்தப்படும். இவ்வாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. 2

## 1400 பேருக்கு விரைவில் கொரோனா தொற்றும்!

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை*

கொழும்பு,ஏப்.5
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை விரைவில் ஆயிரத்து 400 ஆக உயரக்கூடும். கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட கணக்கியல் மாதிரியின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ள இலவச சுகாதார சேவைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் 2

## தாவடியில் எவருக்கும் கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 5
தாவடியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் 18பேரின் மாதிரிகள் நேற்றுமுன்தினம் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று 2

## ஊரடங்கை மீறிய 1,245 பேர் சிக்கினர்

கொழும்பு, ஏப்.5
இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் ஊரடங்குச் சட்ட உத்தரவை மீறிய ஆயிரத்து 245 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடமிருந்து 336 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 2



# கட்டம் கட்டமாக பொதுத் தேர்தல்

### கோத்தா அரசு தீவிர ஆலோசனை

### ஏப்ரல் 26இல் வர்த்தமானி வெளிவரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 5
நாடாளுமன்றத் தேர்தலை எப்பாடுபட்டாவது நடத்தி முடிப்பதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தீவிரமாக உள்ளார். தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை கட்டம் கட்டமாக நடத்துவது தொடர்பில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. 2

## கோத்தா-சஜித் சந்திப்பு நாளை

கொழும்பு, ஏப் 5
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான கட்சிகளின் தலைவர்கள் சிலர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை சந்தித்து 2



## பக்தர்களின் பங்கேற்பின்றி குருத்தோலை ஞாயிறு!

யாழ்ப்பாணம்,ஏப்.5
குருத்தோலை ஞாயிறுத் திருப்பலி வழிபாடுகள், பக்தர்கள் இன்றி இன்று ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் இன்று காலை யாழ் மறை மாவட்டக் குரு முதல்வர் 2

## வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தோர் திரும்புவது தாமதமடையலாம்

**மாவட்டச் செயலர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஏப். 5
வெளி மாவட்டங்களில் இருந்து தொழிலுக்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தொழிலாளர்களை நாளை திங்கட்கிழமை அவர்களது மாவட்டங்களுக்கே அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதும் அந்தப் பணி தற்போது 2



## யாழில் கொரோனா சோதனை

யாழ்ப்பாணம், ஏப்.5
கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமாகின. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இதற்கான பரிசோதனைகள் உரிய பாதுகாப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. (ஓ,5)

## கொரோனா பாதிப்பு 1,200,000 உயிரிழப்பு 65,000

வுகான், ஏப். 5
கொரோனா வைரஸால் உலக அளவில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி 12 லட்சத்தைத் தாண்டியது. சீனாவின் வுகானில் டிசெம்பர் இறுதியில் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் உலகமெங்கும் பேரழிவை ஏற்படுத்தி வருகின்றது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்த வைரஸால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளிலும் இத்தாலி, ஸ்பெய்ன், ஜேர்மனி, பிரான்ஸ் என்பன 2

## பொய்ச் செய்திகளைப் பரப்பி உளப்பாதிப்புக்கு ஆளாக்காதீர்!

*மருத்துவர் சத்தியமூர்த்தி கோரிக்கை*

யாழ்ப்பாணம்,ஏப்.5
பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்று அதிகார பூர்வமாக தெரிவிக்கும் வரையில், பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களை உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாக்க வேண்டாம் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 2

# யாழில் ஊரடங்கு...

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பகுதி பகுதியாக ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துடன் ஆலோசிக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப் படவில்லை.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய 6 மாவட்டங்களுக்கான பொலிஸ் ஊரடங்குச்சட்டம் மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். ஏனைய 19 மாவட்டங்களுக்கான ஊரடங்குச் சட்டம் நாளை காலை 6 மணிக்கு தற்காலிகமாக தளர்த்தப்படும். அதன்பின்னர் பிற்பகல் 2 மணி முதல் மீண்டும் ஊரடங்கு நடைமுறைக்குவரும்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள நடைமுறையை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம், ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு தமது வேலைகளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் அட்டுலுகம மற்றும் கண்டி மாவட்டத்தின் அக்குரணை ஆகிய பகுதிகள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு பகுதிகளுக்கும் செல்வது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏப்ரல் 6 முதல் 10 வரை வீட்டில் இருந்து பணி புரியும் வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் துறையினருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, என்றுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் பகுதி பகுதியாக ஊரடங்கைத் தளர்த்துவதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அந்த ஆலோசனை பின்னர் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. (ஒ,5,44)

# கட்டம் கட்டமாக...

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 26ஆம் திகதி வெளியிடப்படும் என்று கொழும்பைத் தளமாகக் கொண்ட அரசியல் உயர்மட்டங்கள் தெரிவித்தன.

மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வர்த்தமானி வெளியிட்டிருந்தார். அதற்கு அமைவாக ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்றும், மே மாதம் 14ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியாது என்று வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

அரசமைப்புக்கு அமைவாக, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டுமாக இருந்தால், மே மாத இறுதியிலாவது தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால் அரசமைப்பு நெருக்கடி ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது.

இந்த நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 113ஆவது உறுப்புரையின்படி ஜனாதிபதி அறிவித்த தினத்தில் தேர்தல் ஒரு மாவட்டத்தில் நடத்த முடியாவிட்டால் பிறிதொரு தினத்தில் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட முடியும். அதற்கு அமைவாக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, 22 தேர்தல் மாவட்டங்களிலும் ஒரே நாளில் தேர்தலை நடத்தாமல், வெவ்வேறு நாள்களில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 22 மாவட்டங்களிலும் எந்தெந்த் திகதிகளில் தேர்தல் நடைபெறும் என்பதைக் குறிப்பிட்டு, ஏப்ரல் 26ஆம் திகதி வர்த்தமானியை கோத்தாபய வெளியிடவுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஒ,5)

## ஊரடங்கை மீறிய...

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் மொத்தமாக 13 ஆயிரத்து 468 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தக் காலப்பகுதியில் 3 ஆயிரத்து 353 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றது. கொழும்பு , கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும். ஏனைய 19 மாவட்டங்களிலும் நாளை காலை 06 மணிக்குச் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளது. (எ-22)

# தாவடியில் எவருக்கும்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். அரியாலையில் ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகரை தனித்துச் சந்தித்துப் பேசிய தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து தாவடிக் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டது. அவர்களில் 18பேரின் மாதிரிகள் நேற்றுமுன்தினம் பெறப்பட்டு அநுராதபுரம் அனுப்பி வைக்கப்பட்டன. பரிசோதனை முடிவுகள் இன்று காலை கிடைக்கப்பெற்றன. 18பேருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## பாதிப்பு 1,200,000...

வற்றில் மிகையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி 12 லட்சத்து 6 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட் டுள்ளனர். சுமார் 65 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

# ஒருவருக்கு...

அதேவேளை நோய் தொற்றுக்கு உள்ளான 2 பேர் இன்று காலை மருத்துவமனைகளிலிருந்து வீடு திரும்பினர். கொரோனா தொற்றிலிருந்து 29பேர் மீண்டுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர். 133 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ,5)

# கோத்தா-சஜித்....

பேசவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கொரோனா தொற்று தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது. கொரோனா தொற்றுப் பரவலின் பின்னர், ஜனாதிபதியுடன் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளின் தலைவர்கள் முன்னெடுக்கும் முதலாவது சந்திப்பு இதுவாகும். (ந)

# வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தோர்...

தாமதமடையலாம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது வெளிநாட்டில் இருந்து வருகை தந்தோர் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்தோர் எனப் பலரும் கொரோனா அச்சம் காரணமாக ஊரடங்கின் மத்தியில் சொந்த ஊர் திரும்ப முடியாது அகப்பட்டுள்ளனர். கூலிவேலைக்காக வருகை தந்தவர்களில் சுமார் 300 பேர் தங்கியுள்ளனர். இவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி நோய் தொற்று அறிகுறியற்றவர்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து அந்தப் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களை, சொந்த மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,105)

# பொய்ச் செய்திகளைப் பரப்பி...

மனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்றுச் சந்தேக நபர்கள் பரிசோதனைக்காக அனுமதிக்கும் போது, முதலில் அவர்களுக்கு மனத் தைரியத்தை வழங்க வேண்டும். பரிசோதனை முடிவுகள் கிடைத்தவுடன், அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். அதற்கு முன்னர் பொய்யான செய்திகள் பரப்பப்படுவதால் அவர்கள் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் மாத்திரம் அல்ல அவர்கள் கிராமம், சமூகம் என ஒரு பெரிய வட்டமே உள ரீதியாகப் பாதிக்கப்படும். தொற்று இல்லாதவருக்குத் தொற்று உண்டு என பரிசோதனை முடிவு கிடைப்பதற்கு முதல் கூறுவது உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும். அதில் இருந்து அவர்கள் மீள முடியாத நிலை காணப்படுகிறது. ஆகவே ஊடகங்கள் மற்றும் ஏனையோர் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும். மக்கள் சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என்றார். (க-7)

## பக்தர்களின் பங்கேற்பின்றி...

அருட்பணி ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நாட்டில் நடைமுறையில் உள்ள ஊடரங்குச் சட்டத்தால் பொது மக்கள் எவரும் திருப்பலியில் பங்கேற்கவில்லை. (க-7)

# 1400 பேருக்கு விரைவில்...

வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கணக்கியல் மாதிரியின் அடிப்படையிலேயே நேற்று 4 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளிகளின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்திருந்தது. எனினும் கணக்கியல் மாதிரியை விட தொற்றாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். கணக்கியல் மாதிரியின்படி ஏப்ரல் 7ஆம் திகதி தொற்றாளர்களின் தொகை 163 ஆக இருக்கும். ஏப்ரல் 17ஆம் திகதி 340ஆக உயரும். என்றார்.

குறித்த கணக்கியல் மாதிரி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மனோஜ் கிருஷாந்த, பேராசிரியர் நிசாந்த பெரேரா ஆகியோரால் இரண்டு கிழமைக்கு முன்னர் தயாரிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைப் பொறுத்தவரையில், தற்போது மூன்றாவது கட்டத்தின் 'ஏ' பிரிவில் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இது வீடு, குழுமம் என்ற அடிப்படையிலேயே தற்போது பரவி வருகிறது. எனினும் இதனை 3 'பி 'என்ற சிறிய குழுமம் மற்றும் 4ஆம் பிரிவான சமூகத்தரத்துக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது. இந்த நிலையில் தற்போது இலங்கையில் 2 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றாளர்களைப் பராமரிக்கும் திறன் உள்ளது. எனினும் உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது போனால், அது 3 ஆயிரம் தொற்றாளர்களாக மாறும் என்று மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி அலுத்கே தெரிவித்துள்ளார். (க)

# கிளிநொச்சி விவசாயிகள் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விலைநிர்ணயம் செய்தல் போன்ற பொறிமுறைகள் ஒரு கட்டமைப்பின் கீழ் இயங்காமையால், விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதில் அசமந்தப்போக்கில் இருப்பதாலும், பெருமளவு நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு அரச மானியம் மற்றும் களஞ்சியவசதி போதியளவு காணப்படாமையால் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை தென்னிலங்கை அரிசி ஆலைகள் தற்போது கிளிநொச்சி விவாசாயிகளிடமிருந்து அதிக விலையில் நெல்லைக் கொள்வனவு செய்துவருகின்றன.

கிளிநொச்சியில் எத்தனையோ அரிசி ஆலைகளின் அரிசி வகைகள், சந்தையில் காணப்பட்டாலும், சதொச, கார்கில்ஸ் போன்ற நிறுவனங்களில், தென்னிலங்கை உற்பத்தி நிறுவனங்களின் அரிசிகளை முண்டியடித்து வாங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிந்துள்ளது. கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் இடையேயான புரிந்துணர்வு கட்டமைப்பு ஒன்று கட்டமைக்கப்படவில்லை என்றால், எமது நெல்லைக் கொண்டு உற்பத்தியாகும் அரிசியை நாமே அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையைத் தவிர்க்க முடியாது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (க-222)



# சேமிப்பு வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.5

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து, யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதால், குறிப்பிட்ட சில வங்கிகள் நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளன. தேசிய சேமிப்பு வங்கியும் நடமாடும் சேவையை பல இடங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது.

மானிப்பாய் மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் சேவை இன்று நடைபெற்றது.(க-7)

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

தற்போதய சூழ்நிலையில் குருதித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு வல்வை உதயசூரிய கழகம் மற்றும் வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இரத்ததான முகாமில் பங்குபற்ற விரும்புவோருக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்து தரப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க -23)

# சிவனருள் இல்லத்தால் 55 பேருக்கு நிவாரணம்

முல்லைத்தீவு, ஏப்.5

மாந்தை கிழக்கில், 55 வரையான குடும்பங்களுக்கு மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லத்தால் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கொரோனா தொற்றுக் காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக, வருமானத்தை இழந்த தினக்கூலி செய்யும் குடும்பங்களுக்குப் பொருள்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல், எருவில், பூவசரங்குளம், பொன்னகர், கரும்புள்ளியான் வடகாடு, பாலைப்பாணி, பாண்டியன்குளம் உள்ளிட்ட கிராமங்களில் வாழும் சுமார் 55 வரையான குடும்பங்களுக்குப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லத்தால், பாண்டியன்குளம் சிவயோக சுவாமிகள் அறநெறிப் பாடசாலை ஊடாக உலருணவுப்பொருள்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. (க-222)

# தானியச் செய்கை காலத்தின் தேவை

முல்லைத்தீவு, ஏப்.5

சிறு தானியப் பயிர்களைப் பயிரிடுவது இந்தக் காலகட்டத்திலும், இனி வரும் காலங்களிலும் நன்மை பயக்கும் என்று ஒட்டுசுட்டான் மேம்பாட்டு ஒன்றியம் மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

“உங்கள் வீடுகளில் முடிந்தளவு சிக்கனம் பேணுங்கள். நிதி, நிலம், நீர் வசதியுள்ளவர்கள் இயன்றளவு சிறு தானியப் பயிர்களை மேற்கொள்ளுங்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் என்பதற்கிணங்க செயற்படுங்கள். பணம் இருந்தாலும், எமது அன்றாட உணவுப் பொருள்களைப் பெற முடியாத காலம் வரலாம்” என்றும் ஒன்றியத்தினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். (க-500)

# 125 பொதிகள் பகிர்ந்தளிப்பு

முல்லைத்தீவு,ஏப்.5

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஊடாக, 125 குடும் பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. கூழாமுறிப்பு, ஒட்டுசுட்டான், பண்டாரவன்னி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கே இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. ஆலயத்தினர், கிராம அலுவலர் ஆகியோர் இணைந்து பொதிகளை வழங்கினர். (க-500)

## மன்னாரில்

# 170 கூலித் தொழிலாளர்கள் ஊர் திரும்ப முடியா நிலை!

மன்னார், ஏப்.5

வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 170 கூலி தொழிலாளர்கள் மன்னார் பகுதியிலிருந்து தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாது இருப்பதாக மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திணைக்கள மற்றும் பாதுகாப்பு உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“மன்னார் மாவட்டத்தில் கூலித் தொழிலுக்கென வந்திருக்கும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 170 கூலித் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தால் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

இவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்” என்று பிரதேச செயலர் கேட்டுக்கொண்டார்.

“தற்பொழுது ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்ல முடியாதிருப்பதால் இவர்களை தற்பொழுது அவர்களின் இருப்பிடங்களுக்கு அனுப்ப முடியாத நிலை இருக்கின்றது. இருந்தும் ஓரிரு வாரங்கள் பொறுத்திருந்து பின் இதைப் பற்றி ஆராயலாம்” என்று கலந்துரையாடலில் கலந்துகொண்டோர் முடிவு செய்தனர். (ப-60)



## அமெரிக்காவின் கொட்டத்தை அடக்கிய புடின்

மொஸ்கோ, ஏப். 6
அமெரிக்காவில் கொரோனாவின் தாண்டவத்தைக் குறைப்பதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடினிடம் உதவி கேட்டிருந்த நிலையில், அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நிறுவனங்களின் மருத்துவப் பொருள்களை வழங்கி பதிலடி கொடுத்துள்ளார் புடின்.
அமெரிக்காவில் சுமார் 3 லட்சத்து 15 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் தலா ஆயிரம் என்ற அடிப்படையில் உயிரிழப்பு சம்பவித்துக் கொண்டிருக்கின்றது. இதனால் ட்ரம்ப் இந்தியா உள்ளிட்ட சில உலக நாடுகளிடம் உதவி கேட்டுள்ளார். ரஷ்யாவிடமும் அவர் உதவி கேட்டிருந்தார். இதையடுத்து ஒருதொகை மருத்துவப் பொருள்களுடன் புடின் அமெரிக்காவுக்கு ஒரு கப்பலை அனுப்பியுள்ளார். அவ்வாறு புடினால் அனுப்பப்பட்ட மருத்துவப் பொருள்கள் சில அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ரஷ்ய நிறுவனங்களுடையவை. (ம)

# அடுத்த இரண்டு வாரங்கள் உயிரிழப்பு மோசமடையும்!

## அமெரிக்க மக்களுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

வொஷிங்டன், ஏப். 6
கொரோனா வைரஸால் அமெரிக்கா பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த இரண்டு வாரங்களுக்கு உயிரிழப்பு மோசமாக இருக்கும் என்று எச்சரித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
கொரோனா வைரஸ் தொடர்பில் அமெரிக்க மக்களுக்கு விடுத்த அறிவிப்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்க மக்களுக்கு அடுத்த இரு வாரங்கள் மிகமிக மோசமானதாக இருக்கப்போகிறது. கொரோனா வைரஸால் ஏராளமான உயிரிழப்புகள் நேரிடலாம். இதுநாள் வரை அதுபோன்ற சூழலை நாடு பார்த்திராததாக இருக்கும்.
துரதிஷ்டமாக அந்த சூழலை எதிர்கொண்டு வருகிறோம், பல உயிர்களை இழந்திருக்கிறோம். ஆனால், வரும் வாரங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு மாற்றுவோம். அடுத்த இரு மாதங்களில் அமெரிக்காவில் கொரோனா வைரஸால் ஒரு லட்சம் முதல் 2 லட்சம் வரை மக்கள் உயிரிழக்கக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.
ஆனால் இந்த உயிரிழப்புகள் எண்ணிக்கையை நாங்கள் குறைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.
ஆனால் துரதிர்ஷ்டமாக அது போன்ற சூழலுக்குள் நாம் நுழைந்துவிட்டோம், மோசமான உயிரிழப்புகள் இருக்கப்போகிறது, அந்த சூழல் நல்லதாக அமையாது.
இதுபோன்ற உயிரிழப்புகளை நான் இதற்கு முன் பார்த்தது இல்லை என்று உண்மையாக நம்புகிறேன். முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் ஆகியவற்றில் இதுபோன்ற உயிரிழப்புகள் இருந்திருக்கலாம். ஆனால், இது நாம் அனைவருக்குமான போர்க்காலமாக இருப்பது மோசமானதாகும் என்றார்.
துணை அதிபர் பென்ஸ் நிருபர்களிடம் கூறுகையில், 'அமெரிக்காவில் தொடர்ந்து மருத்துவப் பரிசோதனைகளை செய்து வருகிறோம், அதிகரித்து வருகிறோம். எனினும் அடுத்துவரும் வாரங்கள் மக்களுக்கு மோசமானதாக இருக்கப்போகிறது. அமெரிக்கா முழுவதும் மருத்துவப் பரிசோதனைகள் செய்யும் போதுதான் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிக்கும்.
இந்த சூழலைத் தவிர்க்க மக்கள் தீவிரமாக சமூக விலகலைக் கடைப்பிடிக்க வேண்டும், வீட்டுக்குள்ளயே இருக்க வேண்டியது அவசியம். அடுத்துவரும் நாட்களில் நியூயோர்க் நகரம் மிகப்பெரிய உயிரிழப்புகளைச் சந்திக்கும் எனக் கணித்துள்ளோம், அதன்பின் குறையத் தொடங்கும்' என்றார். (ம)





கொரோனா வைரஸால் பிரான்ஸ் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு சுமார் 95 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 8 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அதிகபட்சமாக நேற்றுமுன்தினம் மட்டும் 1,053 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து கொரோனாவை அழிப்பதற்காக நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளது பிரான்ஸ். அந்த நாட்டின் பொதுஇடங்கள் அனைத்தும் கிருமிநாசினிகளால் சுத்தப்படுத்தப்பட்டு வருகின்றன. (ம)

## தலிபன்களை விடுவிப்பதற்கு ஆப்கன் முடிவு

காபுல், ஏப். 6
20 சிப்பாய்களை விடுவிப்பதற்கு தலிபன்கள் சம்மதம் தெரிவித்திருந்த நிலையில், 100 தலிபன்களை விடுவிப்பதற்கு ஆப்கன் அரசும் சம்மதம் தெரிவித்துள்ளது.
ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் தலிபன் பயங்கரவாத அமைப்புக்கும், அமெரிக்க அரசுக்கும் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் பெப்ரவரி மாத இறுதியில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தலிபன்களும் ஆப்கன் அரசும் பரஸ்பரம் கைதிகளை விடுவிக்கச் சம்மதம் தெரிவித்திருந்தன. இந்தப் புரிந்துணர்வின் ஒரு கட்டமாகவே 100 தலிபன்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (ம)


# கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியாவிடம் உதவி கோரியது அமெ.

புதுடெல்லி, ஏப். 6
கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியாவின் உதவியைக் கோரியுள்ளது அமெரிக்கா. மலேரியாவுக்கான மருந்துகளை வழங்கும்படியே அமெரிக்கா தனது கோரிக்கையை முன்வைத்துள்ளது.
கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயிர்காக்கும் மருந்தாக மலேரியாவுக்கு வழங்கப்படும் ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் மாத்திரைகளை வழங்கலாம் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் கடந்த மாதம் பரிந்துரைத்தது.
இந்தப் பரிந்துரைக்குப்பின், இந்த மாத்திரைகளை ஏற்றுமதி செய்வதற்கு இந்திய மத்திய அரசு கடந்த 25ஆம் திகதி தடை விதித்தது. இதனால் அமெரிக்காவுக்கு இந்த மாத்திரைகள் கிடைப்பதில் சிக்கல் நீடிக்கின்றது.
இதையடுத்தே கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக குறித்த மாத்திரைகளை வழங்கும்படி இந்தியப் பிரதமர் மோடியிடம் கேட்டுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இது தொடர்பில் தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்று மோடியும் ட்ரம்புக்கு உறுதியளித்துள்ளார். (ம)



# முரளியை எதிர்கொள்ள முன்வரிசையில் டோனி!

## ஒய்வறையின் இரகசியத்தை வெளிப்படுத்தினார் ரெய்னா




புதுடெல்லி, ஏப். 5
2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் டோனி முன்வரிசையில் களமிறங்கிய மைக்குக் காரணம், முரளியின் பந்துவீச்சை எதிர்கொள்வதற்காகவே என்று தெரிவித்தார் அப்போதைய இந்திய அணியில் இடம்பெற்றிருந்தவரான ரெய்னா.
2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இந்தியா உலகக் கிண்ணத்தை வென்றது. அந்த அணியில் இடம்பெற்றிருந்த வீரரான ரெய்னா, இறுதியாட்டத்தில் இந்திய அணியின் ஓய்வறையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மனந்திறந்து பேசியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
டோனியின் உடல்மொழியைப் பார்த்தபோது அவர் நிச்சயம் உலகக்கிண்ணத்தை வென்று கொடுப்பார் என்றே எனக்குத் தோன்றியது. 91 ஓட்டங்களை எடுத்த டோனி, திறனில் இருக்கும் யுவராஜ் சிங்குக்கு முன்பாகக் களமிறங்கினார். அது ஒரு பெரிய முடிவு, ஆனால் டோனி பயிற்சியாளர் கேரி கிறிஸ்டனிடம் ஏற்கெனவே தான் முரளிதரனை நன்றாக எதிர்த்து ஆடுவேன் என்று கூறினார். அதனால் முன்னால் களமிறங்கினார். எனக்கு இது தெளிவாக நினைவிருக்கிறது. நாங்கள் என்ன முடிவெடுத்தாலும் அது நமக்குச் சாதகமாகவே உள்ளது. அனைவரும் துடுப்பாட்டத்தைப் பற்றியே பேசினர். ஆனால் பந்துவீச்சில் சகீர்கான் எப்போது வீசினாலும் இலக்கை சாய்த்துக் கொடுத்தார்.
இலங்கை அணி நல்ல சவாலான் இலக்கை நிர்ணயித்தாலும் ஓய்வறையில் நாங்கள் அமைதியாகவே இருந்தோம். ஒருவர் ஐஸ் குளியல் போட்டார், ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார், ஆனால் அனைவரும் வெற்றியையே யோசித்துக் கொண்டிருந்தோம். யாரும் ஒருவருடன் ஒருவர் பேசவில்லை. சிந்தனை கிண்ணத்தின் மீதுதான் - என்றார்.
(ம)



# டோனி, வில்லியர்ஸ் பிடித்தமான வீரர்கள்

## விராட் கோலியின் விருப்பத் தெரிவு!

புதுடெல்லி, ஏப். 5
பிடித்தமான துடுப்பாட்ட வீரர்கள் என்றால் அது டோனியும் வில்லியர்ஸும்தான் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் தலைவர் கோலி.
இது தொடர்பில் கோலி மேலும் தெரிவித்ததாவது:
இரண்டு வீரர்களுடன் இணைந்து விளையாடும்போது மிகவும் மகிழ்ச்சியாக அனுபவித்து துடுப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். அவர்களுடன் விளையாடும்போது களத்தில் ஓட்டங்களை எடுக்க படுவேகமாக ஓடியிருக்கிறேன். எங்களுக்குள் தெளிவான புரிந்துணர்வு இருந்துள்ளது. அவர்கள் வேறுயாருமில்லை, ஒருவர் இந்திய வீரர் டோனி. மற்றொரு பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் வீரர் வில்லியர்ஸ். நாங்கள் துடுப்பெடுத்தாடும்போது அதிகமாக பேசிக்கொள்வதுகூட கிடையாது. பார்வையிலேயே புரிந்து கொள்கிறோம் என்றார்.
பெங்களூர் இதுவரை ஐ.பி.எல் கிண்ணத்தை வெல்லாதது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கோலி, எங்கள் அணியில் மிகப்பெரிய வீரர்கள் உள்ளனர். நட்சத்திர வீரர்கள் இருக்கும்போது அந்த அணி மீது எப்போதும் அதிக எதிர்பார்ப்பும், கவனமும் வந்து விடுகிறது. மூன்று முறை இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருக்கிறோம். சிறந்த அணியாக இருந்த போதிலும் ஒரு முறைகூட வாகை சூடவில்லை. இதே போல் மூன்று முறை பிளேஆப் சுற்றுக்கு வந்துள்ளோம். கிண்ணத்தை வெல்லாத வரை இவை எல்லாம் ஒரு விஷயமே இல்லை. ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்வதே எங்களது குறிக்கோள். அதற்கு நாங்கள் தகுதியான அணி. சில சமயம் கிண்ணத்தைப் பற்றி பேசியே கூடுதல் நெருக்கடி உருவாகி விடுகிறது. எனவே நெருக்கடியை எடுத்துக் கொள்ளாமல், உற்சாகமாக விளையாட வேண்டியது முக்கியம் - என்றார்.
(ம)

# கொரோனா அபாயகரம்

## கங்குலி எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப். 5
கொரோனா வைரஸ் பேராபத்தானது. இதுவரை உலகம் காணாதது. இனியும் காண முடியாதது - என்று தெரிவித்துள்ளார் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலி. இதனால் மக்கள் சமூக விலகலை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.
சமூக விலகல் என்பது புதிய ஒற்றுமை, புதிய நல்லிணக்கம் என்பதையும் முக்கியமாக கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் இது நமது தேசியக் கடமை என்பதையும் உணர்க. உலகம் முழுதும் இது கடினமான காலகட்டம், என்று அவர் மேலும் தெரிவித்தார்.
(ம)

# ஐ.பி.எல் தொடரைவிடவும் மக்களின் உயிர் முக்கியம்

## ரெய்னா உணர்ச்சிகரம்



புதுடெல்லி, ஏப். 5
ஐ.பி.எல் தொடரை விட மக்களின் உயிர்தான் முக்கியமானது என்று தெரிவித்துள்ளார் சென்னை சுப்பர் கிங்ஸின் நட்சத்திர வீரர் ரெய்னா.
ஐ.பி.எல் தொடர் நடக்குமா இல்லையா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. சில வேளைகளில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுடன் தொடர் நடத்தப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகின்றது. இந்த நிலையில் இது தொடர்பில் ரெய்னா மேலும் தெரிவித்ததாவது:
உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. ஐ.பி.எல் தொடரை விட ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை முக்கியமானது. மீண்டும் இயல்புநிலை திரும்பும்போது ஐ.பி.எல் தொடர் குறித்து யோசிக்கலாம். தற்போது உயிர் சேதம் ஏற்படுகிறது. இதனால் நமது உயிரை காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் உள்ளோம்.
சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சி முகாம் நன்றாக இருந்தது. வலைப்பயிற்சியில் டோனி சிறப்பாக விளையாடினார் - என்றார். (ம)

# சூதாட்டக்காரர்களை தூக்கில் இடுங்கள்!

## மியான்தத் வலியுறுத்தல்

இஸ்லாமபாத், ஏப். 5
கிரிக்கெட்டில் சூதாட்டம் என்பது, ‘கொலைக்குச் சமம்’ எனவே அதில் ஈடுபடுபவர்கள் தூக்கிலிடப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஜாவித் மியன்தத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆட்ட நிர்ணயம் சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் தூக்கிலிடப்பட வேண்டும் ஏனெனில் இதுவும் கொலையும் ஒன்றுதான். இப்படிச் செய்தால் சூதாட்டம்பற்றி வீரர்களுக்கு அச்சம் ஏற்படும். ஆட்ட நிர்ணயமென்பது என்பது இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு விரோதமானது- என்றார்.
(ம)

# சங்கானையில் நடமாடும் வங்கிச் சேவை

கொடிகாமம், ஏப் 5

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக அவசர பணத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வங்கிகளுக்கு செல்ல முடியாது பொதுமக்கள் அவதியுறுகின்றவர்கள்.

குறிப்பாக அரச பணியாளர்கள் சம்பளம் எடுக்க தவறியவர்கள் மற்றும் ஓய்வூதியம் எடுக்கத் தவறியவர்கள் ஆகியோரின் நிலையினைக் கருத்தில் கொண்டு, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சங்கானை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேசிய சேமிப்பு வங்கியின் சங்கானைக் கிளை 0212250003 இலக்கத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-159)

# தொலைக்காட்சி மூலம் கல்வி

யாழ்ப்பாணம், ஏப்.5

கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு அமைவாக, நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் தரம் 6,11 வரையான வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களை, தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நேத்ரா தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புக்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தொடர்ச்சியான மேலதிக தகவல்கள் உரிய நேரத்தில் வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (க-159)

# கடையை உடைத்து பீடி, சிகரெட் திருட்டு

மன்னார், ஏப்.5

ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி, வர்த்தக நிலையத்தை உடைத்த திருடர்கள், அங்கிருந்த பால்மாவுடன், பீடி பண்டல்கள், சிகரெட் பெட்டிகளைத் திருடிச் சென்ற சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

மன்னார், பேசாலை பிரதான வீதியில் உள்ள கடைத் தொகுதியில் உள்ள கடையொன்றே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வாரமாக மன்னார்ப் பகுதியில் தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள், சிலநாள்கள் தொடர்ச்சியாக அவதானித்து திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். கடையின் முன் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு கடைக்குள் புகுந்த திருடர்கள், அங்கிருந்த சிகரெட், பால் மா, பீடி பண்டல்களைத் திருடிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில், பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-60)

# நடமாடும் பகுதிகளில் சுத்தம் செய்யும் பணி

## வவுனியாவில் இன்று

வவுனியா, ஏப். 5

பொதுமக்கள் நடமாடும் பகுதிகளைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் வவுனியாப் பொலிஸார், விஷேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து இன்று ஈடுபட்டனர்.

வவுனியா நகரசபைத் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் வவுனியா பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோருடன் இணைந்து மடுக்கந்த விஷேட அதிரடிப்படையினர் , 563 மற்றும் 681 ஆகிய இராணுவப் படைப்பிரிவினர், வவுனியாப் பொலிஸார் என்போர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று இது ஆரம்பிக்கப்பட்டு வவுனியா கண்டி வீதி, புகையிரத நிலைய வீதி, பழைய பேருந்து நிலையம், முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு, ஏ-9 வீதி போன்றன இதன் போது சுத்தம் செய்யப்பட்டன. (து-18)



# கிராம அலுவலரின் கடமைக்கு இடையூறு விளைவிக்காதீர்!

மட்டக்களப்பு, ஏப்.5

கிராம அலுவலர்களின் கடமைக்கு இடையூறு விளைவிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய கிராம அலுவலர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவின் கல்லாறு 2 கிராமத்தில் சேவையாற்றும் கிராம அலுவலரின் சேவைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நபரொருபர் செயற்பட்டிருக்கின்றார். அவ்வாறு செயற்பட்ட நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை எமது சங்கம் மேற்கொண்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மாவட்டச் செயலரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலையிலும், கிராம அலுவர்கள் தம்மை அர்ப்பணித்து 24 மணி நேரமும் வேலை செய்கின்றனர். இவ்வாறு கடமைபுரியும், கிராம அலுவலர்களின் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்காது, இடையூறு விளைவிப்ப தென்பது வன்மையாகக் கண்டிக்க தக்கது. தமது வேலைகளுக்கும் அப்பால் ஏனைய அரச திணைக்களங் கள் செய்ய வேண்டிய வேலையையும், தற்போதைய அசாதாரண சூழ்நிலையில், கிராம அலுவர்கள் மக்களுக்காக அடிமட்டத்தில் இருந்து கொண்டு வேலை செய்துகொண்டிருக்கின்றனர். அவ்வாறானவர்களின் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்குவதே தற்போதைய நிலையில் அவசியமாக உணரப்படுகின்றது- என்றுள்ளது. (ப)





# குழந்தைகளுக்கு பால்மா பைக்கற்

யாழ்ப்பாணம்.ஏப்.5

குழந்தைகளுக்கான பசி தீர்ப்போம் என்ற 'லாவா கெயர்' செயல் திட்டத்தில், வட்டுக்கோட்டையில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பால்மா பைக்கற்றுகள் வழங்கப்பட்டன.

இதற்கான உதவியை கரம்பொன் ஊர்காவற்றுறையைச் சொந்த இடமாகவும், கனடாவில் வசித்து வருபவருமான திருமதி. வரதலட்சுமி குலசிங்கம் வழங்கினார். (க-222)



# தெருவோரத்தில் சிசுவின் சடலம்

ஹற்றன், ஏப்.5

லிந்துலை அகரகந்தப் பகுதியில் தெருவோரத்தில் வீசப்பட்டிருந்த சிசுவொன்றின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டது.

தலவாக்கலை டயகம பிரதான வீதியில் அகரகந்த தோட்ட பகுதியில், பிரதான வீதிக்கு அருகாமையில் இந்தச்சடலம் மீட்கப்பட்டது. சடலம் முழுமையாகச் சிதைவடைந்திருப்பதால், சிசுவின் உடலின் ஒரு பாகமே கண்டறியப்பட்டுள்ளது. குறைமாதத்தில் பிரசவிக்கப்பட்ட சிசுவை இவ்வாறு வீசியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக நீதவானின் ஸ்தல விசாரணைகள் முடிவடைந்த பின்னர், மேலதிக விசாரணைக்காகவும், அடுத்தக்கட்ட நடவடிக்கைகளுக்காகவும் பொலிஸார் ஊடாக சிசுவின் சடலம் நுவரெலியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க)

# முடி வெட்ட அனுமதிக்கவும்!

மன்னார், ஏப்.5

மன்னார் மாவட்டத்தில் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று முடி வெட்டுவதற்கு சிகை அலங்கரிப்பாளர்களுக்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் வியாபார நிலையங்கள் எரிபொருள் நிரப்பும் நிலையம் போன்று சலூன் கடைகளும் அதிகளவானோரால் நிரம்பி வழிகின்றன.

அத்துடன் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டு, தளர்த்தப்படும் சில மணித்தியாலங்களுக்குள் அத்தியாவசிய தேவைகளைக் கவனிப்பதற்கு மட்டுமே நேரம் சரியாக இருக்கின்றது. சலூன்களில் காத்திருந்து முடி வெட்டி, சேவ் செய்வதற்கு நேரம் போதாமையாக உள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுத்து சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு, அவர்களும், ஏனையவர்கள் போன்று மக்களின் வீடுகளுக்குச் சென்று தொழிலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-213)

# புலம்பெயர்ந்தோர் நிதியில் 250 குடும்பங்களுக்கு உதவி

மன்னார்,ஏப்.5

சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் மக்களின் நிதி உதவியில், மன்னார் மாவட்டத்தில் நிவாரண உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள எட்டு கிராமங்களில் வசிக்கும், குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

250 குடும்பங்களுக்கும் தலா ஆயிரத்து 350 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க)







சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினர் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நல்லிணக்கபுரம் கிராமம் உள்ளடங்கலாக ஜே/233 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 52 குடும்பங்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/265 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்வபுரம் கிராமத்தில் உள்ள 50 குடும்பங்களுக்குமான உலர் உணவுப்பொதிகளை நேற்று வழங்கினர். (ந)



# நிவாரணம் வழங்க பலர் நிதியுதவி

கொடிகாமம், ஏப்.5

கொடிகாமம் பிரதேசத்தை அண்டிய குறிப்பிட்ட சில கிராமங்களில், நாளாந்த தொழிலின்றி, உணவின்றி அல்லற்படும் சில குடும்பங்களுக்கு நேற்று உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கொடிகாமம் வர்த்தகர்கள், பொது அமைப்புகள், நலன் விரும்பிகளின் நிதிப் பங்களிப்பில், ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. கொடிகாமம் வடக்கில் 22 குடும்பங்களுக்கும், வெள்ளாம் போக்கட்டியில் 12 குடும்பங்களும், கச்சாய் வடக்கில் 20 குடும்பங்களுக்கும் பொருள்கள் வழங்கப்பட்டன.(க-159)

# 28 லட்சம் ரூபா நிதியில் நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

28 லட்சம் ரூபா நிதியில், புங்குடுதீவில் வாழும் சகல மக்களுக்கும் உலர் உணவுகள் பகிர்ந்தளிக்கப் படவுள்ளன.

புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் இடர்கால உதவிக்குழுவுக்கு இந்த நிதியுதவி கிடைத்துள்ளது. புங்குடுதீவைச் சேர்ந்த பிரான்ஸில் வதியும் இருவரது நிதியுதவில் இந்தப் பொருள்கள் வழங்கப் படவுள்ளன. இதற்கான நிதியுதவியை தனது தாயார் சதாசிவம் சிவகாமிப் பிள்ளை நினைவாக சதாசிவம் வைகுந்தராசனும், சாயாஜினி பாஸ்கரனின் நினைவாக பாஸ்கரனும் வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-20)



# அன்பின் கரத்தால் 64 பேருக்கு உதவி

யாழ்ப்பாணம்.ஏப்.5

ஜீவஊற்று அன்பின் கரத்தின் ஊடாக 64 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள வசாவிளான் பிரதேசத்தில் 64 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.



இதற்கான நிதி உதவியை லண்டன் காக்கும் கரங்கள் அமைப்பினர் வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-222)



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 900 குடும்பங்களுக்கு வேள்ட் விசன் நிறுவனத்தால் அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டன. இவற்றை மாவட்டச் செயலரிடம், வேள்ட் விசன் நிறுவனப் பிரதிநிதி பிரதீபன் கையளித்தார்.

# ஆலோசனையைக் கைவிட்டோர் மீளவும் சுய தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஏப். 5

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு வழங்கப்பட்ட ஆலோசனைகளை முறையாகக் கடைப்பிடிக்கத் தவறிய 144 பேர் மீண்டும் சுய தனிமைப்படுத்தலுக்காக புனானை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அக்குரணைப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அனுப்பப்பட்டனர்.

'கொவிட் 19' வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தாலும், மக்களின் கவனவீனத்தால் ஏற்படும் விளைவுகளைத் தடுப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க மாத்திரம் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதை மீறிச் செயற்படுவோரைக் கைதுசெய்ய உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# கொரோனா சோதனைகள் தாமதம்: விரைவில் உணவுப்பற்றாக்குறை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.5

கொவிட் 19 தொற்றற்ற பகுதிகளை அடையாளம் காண, தீவிரமான சோதனைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இல்லையெனில் நாம் அனைவரும் விரைவில் உணவுப் பற்றாக்குறையைச் சந்திப்போம்.

இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அத்தியாவசிய உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள ஏப்ரல் மாத இறுதிக்குள் ஆகக்குறைந்தது சில தொற்றற்ற பகுதிகளில், உணவு உற்பத்தியைத் தொடங்க வேண்டும். சீனாவும் உணவு உற்பத்தியை உறுதிப்படுத்த அதே மூலோபாயத்தைப் பயன்படுத்தியது. ஆனால் நாம் தீவிரமான சோதனையை (உலக சுகாதார நிறுவனம் கூறியபடி) செய்யாமல் தாமதப் படுத்துவது எல்லா வற்றையும் மோசமாக்கும்.

அடுத்த 14 நாள்களுக்குள் நோய்த் தொற்றுள்ளவர்களுடன் தொடர்புடைய, அனைத்துத் தொடர்புகளையும் மீண்டும் மீண்டும் சோதிக்க முடிந்தால், பாதிக்கப்பட்டவர்களை முடிந்தவரை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தலாம்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாளொன்றுக்கு 750 -1000 பேருக்கு இந்தச் சோதனையைக் கூட்டுமாறு கேட்டுள்ளோம். அரசாங்கம் நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனைகளைச் செய்ய வசதியுள்ளதாக அறிய முடிகிறது. ஆயினும் இப்போது 300 பேருக்குக் கிட்டியளவில் மாத்திரமே சோதனை நடைபெறுகின்றது. இதனை அதிகரிக்கா விட்டால், நாங்கள் வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய தேவையான சகல நடவடிக்கைகள் தொடர்ந்து அரசாங்கத்துக்கு வலியுறுத்துவோம்- என்றுள்ளது. (சு)



# கொடிகாமத்தில் 233 பேர் விடுவிப்பு

கொடிகாமம்,ஏப்.5

கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து 233 பேர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை விடுவிக்கப்பட்டனர்.

கொரோனா தடுப்பு நவடிக்கையின் ஒருபகுதியாக , வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கும் திரும்பிய அனைவரும் 14 நாள்கள் கட்டாயம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். நாட்டில் சில மாகாணங்களில் உள்ள படைமுகாங்களில் குறித்த தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் தனிமைப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கொடிகாமம் மற்றும் பலாலி படைமுகாங்களில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் உள்ளன. கொடிகாமம் தனிமைப் படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த 233 பேர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை விடுவிக்கப்பட்டனர். (சு-20)

# எம்.பிக்களுக்குச் சம்பளம் வேண்டாம்: நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்!

## கோத்தாவிடம் மனோ வலியுறுத்து

கொழும்பு, ஏப்.5

தேசிய நெருக்கடியின் பாரதூரத்தை உணர்ந்து நாடாளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாக மீளக்கூட்ட வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தனது சமூக ஊடகத் தளங்களில் கருத்துக் கூறியுள்ள மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

“நாட்டில் நாளுக்கு நாள், பரிசோதிக்க பரிசோதிக்க, புதிது புதிதாக அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றுத் தொடர்பில் ஆராயவும், ஜனாதிபதியால் அறிவிக்கப்படும் நிவாரணங்கள், பெரும்பாலான மக்களுக்கு இன்னமும் கிடைக்காததால், நெருக்கடியாகியுள்ள திக்கற்ற மக்களின் வாழ்வாதாரம் பற்றி ஆராயவும், நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப் பாட்டினால், கொரோனாவுக்கு அப்பால் ஏனைய நோய்களாலும் மக்கள் உயிரிழக்க கூடிய அபாயம் பற்றி ஆராயவும், ஜூன் 2ஆம் திகதிக்கு முன் பொதுத்தேர்தலை நடத்த முடியாததால் ஏற்படுகின்ற அரசமைப்பு நெருக்கடி



தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் கருத்தைப் பெறுங்கள் என ஜனாதிபதிக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு கூறியதை ஆராயவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாக நாடாளுமன்றத்தைக் மீளக்கூட்ட வேண்டும்.

அருகருகாக அமராமல், எம்.பிக்கள் வீடுகளில் இருந்தபடி, தொலைத் தொடர்பு தொழில்நுட்ப காணொலி மூலமாக நாடாளுமன்ற அமர்வு நடத்தப்படலாம். உலகின் வேறுபல நாடுகளில் இத்தகைய காணொலி அமர்வுகள் இன்று நடத்தப்படுகின்றன. இலங்கையில் அனைத்து மக்களும் இன்று வீடுகளில் முடங்கி இருக்கின்றார்கள். எனவே, இந்தக் காணொலி நாடாளுமன்ற அமர்வை அனைத்து மக்களும் பார்த்துக் கேட்க முடியும். இதனால், இன்றைய தேசிய நெருக்கடி தொடர்பில் நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் உருவாகும்” என்று கூறியுள்ளார். (ப-22)

# மானிப்பாய்க்கு மருத்துவக்குழு நேரடி விஜயம்

மானிப்பாய்,ஏப்.5

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவரது, வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுக் காலை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இ.சோதீஸின் ஒழுங்குபடுத்தலில் வலிகாமம் தென்மேற்கு சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கஜேந்திரன் ஆகியோரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனை நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவரது வீடும், அதனைச் சூழவுள்ள பல வீடுகளும் முற்றுமுழுதாகத் தொற்று நீக்கும் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தச் செயற்பாடுகளை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இ.சோதீஸ் தலைமையில் இயங்கிவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செயற்படுத்த வேண்டும் என்று வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளர்.

அதேவேளை தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8 குடும்பங்களுக்கும் மருதடி திண்ணை அறவளி நிலையத்தினரால் உலர் உணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன. உலர் உணவுப்பொருள்கள் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிசீலனையின் பின்னர் பொதியிடப்பட்டு அவர்களுக்குக் கையளிக்கப்படும் என்று அ.ஜெபநேசன் மேலும் தெரிவித்தார். (சு)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 05.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.